பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

07 04 2024 6 45

ஞாயிற்றுக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. பிஜேபி மீண்டும் ஆட்சிப்பொறுப்புக்கு வந்தால் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடரும் என்று அக்கட்சியின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. நாட்டின் ஜனநாயக நடைமுறைகளைப் பாதுகாப்பதில் உறுதியுடன் உள்ளதாக காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

3. நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் தேர்தலாக மக்களவைத் தேர்தல் உள்ளது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது.

4. நாட்டிலேயே வறட்சிக்கு நிவாரணம் அளித்த அரசாக அஇஅதிமுக தலைமையிலான அரசு இருந்தது என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

5. ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் பெங்களூரு அணியை வென்றது.

*----- இனி விரிவான செய்திகள் --*

<<<<>>>>

மக்களவைத் தேர்தலில் பிஜேபி வெற்றி பெற்று மூன்றாவது முறையாக ஆட்சிப்பொறுப்புக்கு வந்தால் முதல் 100 நாட்களில் ஊழலுக்கு எதிரான பல்வேறு முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அக்கட்சியின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் புஷ்கரில் நடைபெற்ற தேர்தல் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், நாட்டு நலனில் காங்கிரஸ் கட்சிக்கு அக்கறை இல்லை என்று குற்றம் சாட்டினார்.

புதிய இந்தியாவை கட்டமைப்பதில் பிஜேபி உறுதியுடன் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

பெண்களின் பாதுகாப்பு மற்றும் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று பிரதமர் கூறினார்.

<<<<>>>>

நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் தேர்தலாக மக்களவைத் தேர்தல் உள்ளது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் திரு. பிரகாஷ் காரத் தெரிவித்துள்ளார்.

மக்களவைத் தேர்தலையொட்டி, மதுரையில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், கொள்கை ரீதியான அரசியலில் பிஜேபி ஈடுபடவில்லை என்று குற்றம்சாட்டினார்.

பல்வேறு எதிர்க்கட்சித் தலைவர்கள், அமலாக்கத்துறை, வருமான வரித்துறை, சிபிஐ போன்ற அமைப்புகளால் விசாரணை என்ற பெயரில் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுவதாக அவர் குறை கூறினார்.

தேர்தல் பத்திர முறைகேடு குறித்து உச்சநீதிமன்றத்தின் கண்காணிப்பில் முறையான விசாரணை நடைபெற வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் மாநிலங்களுக்கு நிதிகளை பகிர்ந்தளிப்பதில் மத்திய அரசு பாரபட்சமாக நடந்துகொள்கிறது என்று திரு. பிரகாஷ் காரத் தெரிவித்தார்.

<<<<>>>>

நாடு முழுவதும் சமூகநீதியை பரவச் செய்வதற்கான வாய்ப்புகளை இந்த தேர்தல் உருவாக்கியுள்ளதாக திமுக தலைவரும், மாநில முதலமைச்சருமான திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

சிதம்பரத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், ஒருங்கிணைந்த எதிர்க்கட்சி கூட்டணியில் உள்ள கட்சிகளின் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்று தெரிவித்தார்.

வேளாண் விளைபொருளுக்கு மொத்த உற்பத்தி செலவுடன் கூடிய குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயம் செய்யப்படும் என்பன உள்ளிட்ட பல்வேறு வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கூறினார்.

<<<<>>>>

நாட்டிலேயே வறட்சிக்கு நிவாரணம் அளித்த அரசாக அஇஅதிமுக தலைமையிலான அரசு இருந்தது என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூர் நாடாளுமன்ற தொகுதியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், விவசாயிகளின் நலன்களைப் பாதுகாப்பதில் அக்கறை கொண்ட கட்சகியாக அஇஅதிமுக உள்ளது என்று கூறினார்.

அஇஅதிமுக ஆட்சியில் இருந்தபோது பெண்கள் நலனைப் பாதுகாக்கும் வகையில் தாலிக்குத் தங்கம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதை திரு. எடப்பாடி பழனிசாமி சுட்டிக்காட்டினார்.

<<<<>>>>

மக்களவைத் தேர்தலில் முதல்முறை வாக்காளர்களை ஊக்குவிக்கும் வகையில் நாடு முழுவதும் தேர்தல் ஆணையத்தின் சார்பில் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழகத்திலும் மாவட்டம்தோறும் இது தொடர்பான நடவடிக்கைகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

முதல்முறை வாக்காளர்களுக்கு வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்து ஏற்படுத்திய விழிப்புணர்வு பயனுள்ளதாக அமைந்தது என்று காஞ்சிபுரத்தைச் சேர்ந்த கல்லூரி மாணிவி தெரிவித்தார்.

<<<<>>>>

மக்களவைத் தேர்தலில் ஒருங்கிணைந்த எதிர்க்கட்சிக் கூட்டணி வெற்றி பெற்று ஆட்சியமைத்தால் தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்று மதிமுக பொதுச்செயலாளர் திரு. வைகோ நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பெரம்பலூரில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், தமிழகத்தில் திமுக தலைமையிலான இரண்டரை ஆண்டுகால ஆட்சியில் பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

<<<<>>>>

நாட்டின் ஜனநாயக நடைமுறைகளைப் பாதுகாப்பதில் உறுதியுடன் உள்ளதாக காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

நெல்லை மக்களவைத் தொகுதியில் நடைபெற்ற தேர்தல் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. செல்வப்பெருந்தகை, அடுத்த தலைமுறையைப் பாதுகாக்கும் தேர்தலாக இந்த மக்களவைத் தேர்தல் அமைய வேண்டும் என்று கூறினார்.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழகத்திற்கு மத்திய அரசு எவ்வித நிதி உதவியும் வழங்கவில்லை என்று அவர் கூறினார்.

முன்னதாக இக்கூட்டத்தில் பேசிய திமுக தலைவர்களில் ஒருவரும், மாநில அமைச்சருமான திரு. தங்கம் தென்னரசு, இந்த மக்களவைத் தேர்தல் நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கக்கூடிய தேர்தல் என்று கூறினார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

குவைத் பிரதமர் திரு. ஷேக் முகமது சபா அல்-சலாம் அல்-சபா, தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

<<<<>>>>

ஈரான் மற்றும் பாகிஸ்தானில் உள்ள ஆஃப்கன் அகதிகளுக்கு உதவிட 620 மில்லியன் அமெரிக்க டாலர்கள் தேவைப்படும் என தெற்காசிய அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் கூறியுள்ளது.

<<<<>>>>

ஈக்வடார் நாட்டுடனான தூதரக ரீதியிலான உறவுகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக மெக்சிகோ அறிவித்துள்ளது.

<<<<>>>>

கஜகஸ்தான் அருகே ஓரன்பர்க் பகுதியில் உள்ள அணையில் இரண்டு இடங்களில் உடைப்பு ஏற்பட்டு வெள்ளநீர் குடியிருப்பு பகுதிகளுக்குள் புகுந்ததில் 3 பேர் உயிரிழந்தனர்.

<<<<>>>>

கேரளாவின் பல்வேறு மாவட்டங்களில் அடுத்த 4 நாட்களுக்கு வெப்பநிலை 40 டிகிரியாக அதிகரிக்கும் என்பதால் வானிலை ஆய்வு மையம் மஞ்சள் நிற எச்சரிக்கை விடுத்துள்ளது.

<<<<>>>>

தென்காசி மாவட்டத்தில் 500 கிராமியக் கலைஞர்கள் மற்றும் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் கலந்துகொண்ட பிரமாண்ட வாக்காளர் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

<<<<>>>>

திருப்பத்தூர் மாவட்டத்தில் மக்களவைத் தேர்தலையொட்டி காவல்துறையினர் மற்றும் துணை ராணுவப் படையினர் கொடி அணிவகுப்பு நடத்தினர்.

<<<<>>>>

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி ராஜகோபாலசுவாமி கோயிலில் பங்குனி உற்சவத்தின் 11ஆம் நாளான நேற்று ஆதிசேஷ வாகன வீதி உலா நடைபெற்றது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்தி*

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் பெங்களூரு அணியை வென்றது.

ஜெய்ப்பூரில் நேற்றிரவு நடைபெற்ற இப்போட்டியில் முதலில் ஆடிய பெங்களூரு அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 183 ரன் எடுத்தது.

184 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு ஆடிய ராஜஸ்தான் அணி, 19 புள்ளி ஒரு ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 189 ரன் எடுத்தது.

இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் மும்பை அணி - தில்லி அணியை எதிர்கொள்கிறது.

மும்பையில் நடைபெறும் இப்போட்டி, மாலை மணி 3.30க்கு தொடங்குகிறது.

மற்றொரு போட்டியில் குஜராத் அணி, லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

லக்னோவில் நடைபெறும் இப்போட்டி இன்றிரவு ஏழரை மணிக்கு தொடங்குகிறது.

<<<<>>>>

ஆஸ்திரேலியாவில் உள்ள பெர்த் நகரில் இந்திய – ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையேயான இரண்டாவது ஹாக்கிப் போட்டி இன்று நடைபெறுகிறது.

இந்திய நேரப்படி பிற்பகல் 2 மணிக்கு இப்போட்டி தொடங்குகிறது.

<<<<>>>>

கஜகஸ்தானில் நடைபெற்ற **Varazdin** சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் ஹர்மித் தேசாய் தோல்வியடைந்தார்.

**<<<<The end>>>>**